**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 31 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆடி மாதம் 15ம் நாள்
**இ.ம.எண். 2/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 21/2024**

ராஜா ..மனுதாரர்/ வாதி

//எதிர்//

புஷ்பலதா ..எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 31.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S.கவியரசன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் அசல் வழக்கில் கடந்த 03.10.2024 அன்று தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர், இம்மனுவானது மனு சொத்தின் அமைப்பு மற்றும் அமைவிடத்தினை பார்வையிட்டு வழக்கறிஞர்/ஆணையர் அவர்களை நியமனம் செய்து நில அளவையர் உதவியுடன் மனு சொத்தினை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி ஆவார். எதிர்மனுதாரர் பேரில் தாவா சொத்தை வசம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்தில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆக்கிரமித்து வீடு கட்ட முயற்சி செய்ததால், அசல் வழக்கு எண் 34/2021 தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் உள்ள போது நீதிமன்ற வழக்கை மதிக்காமல் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் வீடு கட்டியுள்ளதாகவும், ஆகவே தனக்கு சொந்தமான தாவா சொத்தை வசம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் தாவா சொத்தில் வீடு கட்டியுள்ளதை சமூகம் நீதிமன்றத்திற்கு தெரிவிக்க நில அளவையர் உதவியுடன் வழக்கறிஞர்/ஆணையர் நியமனம் செய்து

தாவா இடத்தை அளவீடு செய்து, பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிர்மனுதாரர் அசல் வழக்கில் கடந்த 03.10.2024 அன்று தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

4. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:</u>**

5. மனுதாரர் தரப்பில், தாவா சொத்தை பொறுத்து வசப்பரிகாரம் கோரி மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமித்து வீடு கட்டக்கூடாது என அவருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 34/2021 என்ற வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கு நிலுவையில் இருந்தபோதே எதிர்மனுதாரர் தாவா சொத்தில் வீடுகட்டி உள்ளதாகவும், எதிர்மனுதாரர் தாவா சொத்தில் வீடு கட்டி உள்ளதை நிரூபிக்க வழக்கறிஞர் ஆணையரை கொண்டு தாவா இடத்தை பார்வையிட்டு நில அளவையரின் உதவியுடன் அளவீடு செய்து வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி கூறப்பட்டுள்ளது.

7. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக வசப்பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் வாதிக்கு சொந்தமான தாவா சொத்தை ஆக்கிரமம் செய்து அதில் RCC வீடு கட்டியுள்ளதாகவும், அதனால் அந்த வீட்டை அப்புறப்படுத்தி தாவா சொத்தை வாதியின் வசம் ஒப்படைக்குமாறு கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமித்து வீடு கட்டி உள்ளாரா என்பதை அறிய வேண்டியது இந்த வழக்கினை தீர்மானிப்பதற்கு ஏதுவாக இருக்குமென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்தை பார்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை தாக்கல்

செய்வது இந்த வழக்கினை தீர்மானிப்பதற்கு அவசியமாக உள்ளதால் இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

10. எனவே, வழக்கறிஞர் திரு. N. பூபாலன்அவர்களை வழக்கறிஞர் ஆணையராக நியமித்து உத்தரவிடப்படுகிறது. மேற்கண்ட வழக்கறிஞர் /ஆணையரின் ஊதியமாக ரூ.5,000/– என நிர்ணயிக்கப்படுகிறது. மனுதாரர் வழக்கறிஞர்/ ஆணையரின் ஊதியத்தை இந்நீதிமன்றத்தில் 18.08.2025 க்குள் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

11. வழக்கறிஞர் ஆணையர் தகுதிவாய்ந்த நில அளவையர் உதவியுடன் வழக்கு சொத்திற்கு சென்று இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு கொடுத்து வழக்கு சொத்தை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யுமாறு உத்தரவிடப்படுகிறது. ஆணையர் அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா 18.09.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 31.07.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

ஒப்பம் (P. கனிமொழி)

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**

**இணைப்பு :**

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ஒப்பம் (P. கனிமொழி)

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**